بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *10/10/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### மக்கா வெற்றிக்குப் பிறகு நிகழ்ந்த சில படையெடுப்புகள் மற்றும் தபூக் போர் ஆகியவற்றின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

மக்கா வெற்றியைத் தொடர்ந்து மாநபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிய பிறகு, சில போர்ப்படைகள் அனுப்பியது குறித்து குறிப்புகள் உள்ளன. அவற்றை நான் தற்போது குறிப்பிடுவேன்.

ஒரு குறிப்பு கைஸ் பின் சாஃத் பின் உபாதா போர்ப்படை பற்றியதாகும். இது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில் நடந்தது. மாநபி (ஸல்) அவர்கள் ஜிஃரானாவிலிருந்து மதீனாவுக்குத் திரும்பியபோது, மக்களை இஸ்லாத்திற்கு அழைக்க பல்வேறு பகுதிகளுக்கு குழுக்களை அனுப்பினார்கள். அன்னார் முஹாஜிர் பின் அபி உமையா (ரலி) அவர்களை ஏமனின் தலைநகரான சன்அவிற்கும், ஜியாத் பின் லபீத் (ரலி) அவர்களை ஹித்ர மவுத்துக்கும் அனுப்பினார்கள். ஒரு படையைத் தயார் செய்தார்கள். அதன் அமீர் கைஸ் பின் சாஃத் (ரலி) ஆவார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைஸ் பின் சாஃத் (ரலி) அவர்களை நானூறு பேருடன் ஏமனின் சதாஃ கோத்திரத்தை இஸ்லாத்தின் பால் அழைக்க அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் கைஸ் (ரலி) கஸ்ரஜின் தலைவர் ஹஸ்ரத் சாத் பின் உபாதா (ரலி) அவர்களின் மகன் ஆவார். அவர் மிகவும் சிறந்த ஆலோசனை வழங்கும் மற்றும் திறமை மிக்க குதிரை சவாரி செய்யும் மனிதராகக் கருதப்பட்டார். கொடை பண்பில் அவர் மிகவும் பிரபலமானவர் ஆவார். ஹஸ்ரத் கைஸ் கனாஹ்வில் முகாமிட்டிருந்தார். அப்போது சதாஃ கோத்திரத்தைச் சேர்ந்த ஜியாத் பின் ஹாரிஸ் கடந்து சென்றார். அவர் சிறிது காலத்திற்கு முன்பு இஸ்லாத்திற்கு மாறியிருந்தார். இந்த படை தனது கோத்திரத்தைத் தாக்கப் போகிறது என்பதை அவர் அறிந்தபோது, அவர் நேராக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அன்னார் அனுப்பிய படையைத் திரும்ப அழைக்குமாறு கேட்டுக் கொண்டார். ‘நான் என் மக்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாக உறுதியளிக்கிறேன்’ என்றும் கூறினார். நபி (ஸல்) அவர்கள் அவரது வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு படையைத் திரும்ப அழைத்தார்கள்.

அதன் பிறகு, அவர் படிப்படியாகப் பேசியபோது, அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். ஏனெனில், அவர்களைத் தாக்கி மக்களை வலுக்கட்டாயமாக இஸ்லாத்திற்கு மாற்றுவதோ இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிரானது. மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் செயல்கள் மற்றும் சுன்னத்திற்கும் எதிரானது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸியாத் (ரலி) அவர்களை அவர்களின் தலைவராக நியமித்தார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் உயைனா பின் ஹிஸ்ன் (ரலி) ஃபசாரியின் படை குழு ஆகும். ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் பனு தமீம் நோக்கி நடைபெற்றது. இதன் பின்னணி என்னவென்றால், மாநபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிஷ்ர் பின் சுஃப்யான் (ரலி) அவர்களை பனூ கஅப்-க்கு, சதகாத் அதாவது ஜகாத் செல்வத்தை வசூலிக்க அனுப்பினார்கள். எனவே ஹஸ்ரத் பிஷ்ர் பின் சுஃப்யானின் உத்தரவின் பேரில், பனூ குஸாஆவின் செல்வம் எல்லா பக்கங்களிலிருந்தும் அவர்களை நோக்கி குவியத் தொடங்கியது. முஸ்லிம்கள் அல்லாத பனூ தமீம், இந்த செல்வம் அதிகமாக இருப்பதாக எண்ணி, அவர்களிடம், "இவர் ஏன் எங்கள் செல்வத்தை அநியாயமாக எடுத்துக் கொள்கிறார்?" என்று கேட்டார்கள். அவர்கள் தங்கள் வாள்களை உருவினர். இந்தப் போர் மற்றும் தகராறின் நிலையைக் கண்ட ஹஸ்ரத் பிஷ்ர் பின் சுஃப்யான் அங்கிருந்து எந்த விதமான வசூலும் செய்யாமல் திரும்பினார்கள்.

ஹஸ்ரத் பிஷ்ர் பின் சுஃப்யான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நிலைமையைத் தெரிவித்தார்கள். மாநபி (ஸல்) அவர்கள், ஐம்பது அரபு குதிரை வீரர்களுக்கு ஹஸ்ரத் உயைனா பின் ஹிஸ்ன் (ரலி) அவர்களைத் தலைமையாக்கி பனூ தமீமுக்கு அனுப்பினார்கள். அன்னார் தம் தோழர்களுடன் புறப்பட்டார்கள். அவர்கள் இரவில் பயணம் செய்து காலையில் பனூ தமீம் தங்கள் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்த பாலைவனத்தை அடைந்து ஒளிந்து கொண்டனர். பனூ தமீம் மக்கள் இந்தப் படையைக் கண்டதும், எல்லாவற்றையும் விட்டு விட்டு அங்கிருந்து தப்பி ஓடினர். பதினொரு ஆண்கள், பதினொரு பெண்கள் மற்றும் முப்பது குழந்தைகள் சிறைபிடிக்கப்பட்டு மதீனாவிற்கு கொண்டு வரப்பட்டனர். மேலும், மாநபி (ஸல்) அவர்களின் உத்தரவின்படி, அவர்கள் ஹஸ்ரத் ரம்லா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டனர்.

பின்னர், பனு தமீமின் எண்பது அல்லது தொண்ணூறு முன்னணி உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு நபி (ஸல்) அவர்களிடம் வந்தது. இந்தக் குழுவில் கோத்திரத்தைச் சேர்ந்த சில திறமையான கவிஞர்கள் மற்றும் சொற்பொழிவாளர்கள் அடங்குவர். தூதுக்குழுவின் தலைவர், "நாங்கள் கவிதை மற்றும் பேச்சில் உங்களுடன் போட்டியிட விரும்புகிறோம்" என்றார். அதாவது, எங்கள் நாட்டின் பேச்சாளர் மற்றும் கவிஞர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் என்பதைப் பார்க்க, நீங்கள் பேச்சிலும் கவிதையிலும் எங்களுடன் போட்டியிட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எங்கள் பேச்சாளர்களைப் பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம். எங்கள் கவிஞர்களும் நல்லவர்கள் என்றார்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: "கவிதை மற்றும் பேச்சில் பெருமை கொள்வதற்கு வந்துள்ளேன் என்பது எனது பணியின் நோக்கம் அல்ல. நான் எனது கவிதை மற்றும் பேச்சை பெருமையுடன் முன்வைக்க வரவில்லை. உங்களை எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் கொண்டு செல்வதே எனது நோக்கம் ஆகும். ஆனால் இதுவே உங்கள் வருகையின் நோக்கம் என்றால், உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். நீங்கள் விரும்பினால், அதைச் செய்யுங்கள், நாங்கள் அதற்கு பதிலளிப்போம்.

போட்டி நிறைவு பெற்றவுடன் தூதுக்குழுவினர் ஒன்றாக அமர்ந்தனர். தூதுக்குழுவுடன் வந்த அல்-அக்ரா பின் ஹாபிஸ், தன் தோழர்கள் முன் தன்னிலை மறந்து கருத்துத் தெரிவித்தார். அதாவது அவர்களின் சொற்பொழிவாளர் நம்முடைய பேச்சாளரை விட சிறந்தவர் என்றும், அவர்களின் கவிஞர் நம்முடைய கவிஞரை விட மிக உயர்ந்த தரத்தில் இருப்பதாகவும் கூறினார். அவர்கள் நம்மை விட மிகவும் முன்னேறி உள்ளனர் என்றும் கூறினார். பின்னர், பேசி முடித்ததும், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். பனூ தமீம் மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, நபி (ஸல்) அவர்கள் அவர்களின் கைதிகளைத் திருப்பி அனுப்பி, அவர்கள் அனைவருக்கும் வெகுமதிகளையும் கௌரவத்தையும் வழங்கினார்கள்.

ஒரு அறிவிப்பின் படி, அன்னார் குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஐநூறு திர்ஹாம்களைக் கொடுத்தார்கள். இந்தக் குழுவில் உறுப்பினராக இருந்த அத்தர் பின் ஹாஜிப், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு சால்வையை அன்பளிப்பு செய்தார். இந்த சால்வை கிஸ்ராவால் அவருக்கு வழங்கப்பட்டது. இந்த சால்வை தங்க வேலைப்பாடுகளுடன் கூடிய மிக உயர்த்தர பட்டு சால்வை என்று கூறப்படுகிறது. சால்வையின் நேர்த்தியையும் மென்மையையும் தோழர்கள் கண்டதும், அவர்கள் மிகவும் ஈர்க்கப்பட்டு, அதைத் தங்கள் கைகளால் தொடத் தொடங்கினர். இந்த அணுகுமுறையைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், "இந்த அங்கியைப் பார்த்து நீங்கள் மிகவும் ஆச்சரியப்படுகிறீர்கள். சொர்க்கத்தில் உள்ள சஅத்தின் அங்கி மிகவும் மென்மையானது மற்றும் இவற்றை விட மிகச் சிறந்தது" என்று கூறினார்கள்.

பின்னர் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு சஃபர் மாதம் குத்பா பின் ஆமீர் போர்ப்படை குறிப்பு உள்ளது. மாநபி (ஸல்) அவர்கள் குத்பா பின் ஆமிரை ஒரு அறிவிப்பின் படி கபாலாவுக்கு அருகில் அனுப்பினார்கள். மற்றொரு அறிவிப்பின் படி, அவர் பைஷாவுக்கு அருகில் அனுப்பப்பட்டு, அவர்களை உடனடியாகத் தாக்க உத்தரவிட்டார்கள். முஸ்லிம்கள் அவர்களைத் தாக்கினர். ஒரு கடுமையான போர் நடந்தது. இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர். எதிர் கோத்திரத்தைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் கத்பா (ரலி) அவர்கள் ஒட்டகங்கள், ஆடுகள் மற்றும் பெண்களை மதீனாவிற்கு போர்ச் செல்வங்களில் கொண்டு வந்தார்.

பின்னர், ஸஹ்ஹாக் பின் சுஃப்யான் கலாபியின் போர்ப்படை குறிப்பு. இது ரபியுல்-அவ்வல், ஹிஜ்ரி 9 இல் நடந்தது. மாநபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஹ்ஹாக் பின் சுஃப்யான் கிலாபி (ரலி) அவர்களை அவர்களது சொந்த கோத்திரமான பனு கிலாபிற்கு கர்தா எனும் இடத்திற்கு அனுப்பினார்கள். அவர் இஸ்லாத்தின் செய்தியைத் தெரிவித்தார். ஆனால் மக்கள் மறுத்துவிட்டனர். போர் உச்சத்தை எட்டியது. அவர் 'கர்தா' மக்களை தோற்கடித்து போர் செல்வத்தைக் கைபற்றினார்.

பின்னர் ஹஸ்ரத் அல்கமா பின் மஜ்ஸஸ் (ரலி) ஜித்தாவை நோக்கிச் சென்றது பற்றிய குறிப்பு உள்ளது. இந்த சம்பவம் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரபியுஸ் ஸானியில் நடந்தது. வேறு சில அறிவிப்பின்படி அது ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு சஃபரில் நடந்தது. அபிசீனியா மக்களிடமிருந்து சில போர்வீரர்கள் ஜித்தா கடற்கரையில் தரையிறங்கியதாக மாநபி (ஸல்) அவர்கள் கேள்விப்பட்டார்கள். சில அறிவிப்புகளின்படி, அவர்கள் மக்கா மக்களுக்கு எதிராக கொள்ளையடிக்க விரும்பினர். அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அல்கமா (ரலி) அவர்களை முந்நூறு பேருக்கு தலைவராக்கி அனுப்பினார்கள். ஜித்தா கடற்கரையில் தரையிறங்கிய அபிசீனியர்கள் ஹஸ்ரத் அல்கமாவின் வருகையை அறிந்ததும், தங்கள் படகுகளில் ஏறி கடலுக்கு ஓடிவிட்டனர். ஹஸ்ரத் அல்கமா, அவர்களை ஒரு தீவு வரை பின்தொடர்ந்தார்கள் .

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்தப் படையெடுப்பின் ஒரு சம்பவம் குறிப்பிடத் தக்கது என்று கூறினார்கள்:* அது என்னவென்றால் படையின் அமீர் மக்களை நெருப்பில் குதிக்க கட்டளை இட்டது. அதில் குதிக்க சிலர் தயாரானது. சிலர் அந்த செயல் செய்ய மறுத்தது. அவர்கள் திரும்பி வந்தபோது, மக்கள் இதை நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்தனர். நபி (ஸல்) அவர்கள், மிகவும் வெறுப்படைந்து, "அவர்கள் அதில் நுழைந்திருந்தால், மறுமை நாள் வரை அவர்கள் அதிலிருந்து வெளியே வந்திருக்க மாட்டார்கள். கீழ்ப்படிதல் சரியானதில் மட்டுமே உள்ளது" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தையும் விவரித்துள்ளார்கள்: ஷரியாவுக்கு எதிரான விஷயங்களில் கீழ்ப்படிதல் இல்லை.

பின்னர், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஃபில்ஸ் பானு தையின் பக்கம் அனுப்பிய குறிப்பு உள்ளது. ரபியுஸ் ஸானி ஹிஜ்ரியின் ஒன்பதாம் ஆண்டில் நடந்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், பனூ தையின், ஃபில்ஸ் சிலையை அழிக்க ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நூற்றைம்பது அன்சாரிகளுடன் அனுப்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் விடியற்காலையில் தாக்கி அவர்களின் ஃபில்ஸ் சிலையை அழித்தார்கள். பல கைதிகளும் கால்நடைகளும் கைப்பற்றப்பட்டன. இது கொடைக்கு பேர் போன ஹாதிம் தாயின் கோத்திரம் ஆகும். அந்த கைதிகளில் ஹாதிம் தாயின் மகள் சஃபானாவும் இருந்தார். கோத்திரத்தின் தலைவரான ஹாதிம் தாயின் மகன் அத்தி தப்பி ஓடி சிரியாவுக்குச் சென்றார். சஃபானா நபி (ஸல்) அவர்களிடம் தன் மீது கருணை காட்டும்படி, அதாவது தன்னை விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே நபி (ஸல்) அவர்கள் அவர் மீது கருணை காட்டி அவரை விடுவித்தார்கள். இதன் விளைவாக, அவர் ஒரு முஸ்லிமானார். அவர் விடுதலை ஆன பிறகு மாநபி (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்று தன் சகோதரர் அத்தியிடம் சென்றார். அவர் தன் சகோதரர் அத்தியிடம் விரைவாக மதீனாவில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவரிடம் பேசத் தொடங்கி, அவருடைய மதம் மற்றும் தனிப்பட்ட விவகாரங்கள் பற்றி சில விஷயங்களைச் சொன்னார்கள். இவற்றில் சில விஷயங்கள் அத்தியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்களையும் இவை அனைத்தையும் பார்த்த பிறகு, நான் ஒரு முஸ்லிமாகிவிட்டேன் என்று அத்தி கூறுகிறார். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இந்தப் படைக்கு சிறிது காலத்திற்கு பிறகு, தை கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குழு நபி (ஸல்) அவர்களுக்கு சேவை செய்ய வந்தது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் உக்காஷா பின் முஹ்சினின் குறிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படை ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரபியுஸ் ஸானியில் அனுப்பப்பட்டது. ஹஸ்ரத் உக்காஷாவின் இந்தப் போரின் கூடுதல் விவரங்கள் விரிவாகக் கொடுக்கப்படவில்லை. இது நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தபூக் போர் பற்றிய சில ஆரம்ப தகவல்களை இப்போது தருகிறேன். இது ரஜப், ஒன்பது ஹிஜ்ரி, கிபி 630 செப்டம்பர் மாதம் நடந்தது. இது நபி (ஸல்) அவர்களின் கடைசிப் போர் ஆகும். தபூக் என்ற நீரூற்றில் நின்றதால், இந்தப் போர் தபூக் போர் என்று அழைக்கப்படுகிறது. தபூக் போர் குர்ஆனில் ஸாஅதுல் உஸ்ர், அதாவது, சிரமத்தின் நேரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம்கள் நிறைய சிரமங்களையும் கஷ்டங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. தபூக் போரின் அடிப்படை காரணங்கள், மக்கா வெற்றி மற்றும் பனு ஹவாசின் போன்ற மிகவும் சக்திவாய்ந்த கோத்திரங்களின் படுதோல்வி ஆகியவை ஆகும்.

முஸ்லிம்கள் அரேபியாவைச் சுற்றியுள்ள அனைத்துக் கோத்திரங்கள் மீதும் கட்டுப்பாட்டைப் பெற்றதைப் பார்த்த யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் நயவஞ்சகர்கள் ஆகியோர் தங்களின் அனைத்து முயற்சிகளும் வீணாகிவிட்டதைக் கண்டு, அந்தக் காலத்தின் வல்லரசான ரோமானியப் பேரரசரிடம் உதவி பெற முடிவு செய்தனர். இதற்காக அவர்கள் மிகப் பெரிய மற்றும் மிகவும் ஆபத்தான திட்டத்தை வகுத்தனர். ஒருபுறம், அவர்கள் ரோமானியப் பேரரசரைத் தொடர்பு கொண்டு, முஸ்லிம்களை அழிக்க தனது படையை அனுப்ப அவரைத் தயார்படுத்தினர். மறுபுறம், ரோமானியப் பேரரசர் முஹம்மது (ஸல்) அவர்கள் உட்பட மதீனாவில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் அழிக்க தனது படையை அனுப்புவதாக நயவஞ்சகர்கள் மதீனாவில் வதந்திகளைப் பரப்பத் தொடங்கினர்.

இந்த வழியில், நயவஞ்சகர்களும் பிற எதிரிகளும் நபி (ஸல்) அவர்களே மதீனாவை விட்டு சிரியாவிற்கு இராணுவத்தை எதிர்கொள்ளச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. இரண்டு சூழ்நிலையிலும், பயணத்தின் சிரமங்கள் அல்லது ரோமானியப் பேரரசருடனான மோதல், முஸ்லிம்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் மரணத்தை உறுதி செய்யும் என்று விரும்பினர். நவூதுபில்லாஹ்.

எப்படியிருந்தாலும், இதைப் பற்றிய ஒரு நீண்ட விளக்கம் உள்ளது. அதை நான் பின்னர் விளக்குகிறேன்.

இன்று, ரப்வாவில் உள்ள கோல் பஜாரில் உள்ள மஹ்தி பள்ளிவாசலில் தீவிரவாதிகள் தாக்கினர். அங்கு நமது ஐந்து, ஆறு பேர் காயமடைந்தனர். பலத்த காயமடைந்த இருவர் வயிற்றில் சுடப்பட்டுள்ளனர். மேலும் அவர்களுக்கு அபேரேஷன் நடைபெறுகிறது. இறைவன் அவர்கள மீது அருள் செய்வானாக. மீதமுள்ள காயமடைந்தவர்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. தீவிரவாதிகளில் ஒருவருன் நமது பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டான். ஒருவன் ஓடிவிட்டான். இதுவரையிலான அறிக்கை இதுதான். மீதமுள்ள விவரங்கள் விரைவில் வரும்.

எல்லாம் வல்ல இறைவன் இந்த தீவிரவாதிகளையும், சட்டத்தை மீறுபவர்களையும் ஜமாஅத்தின் எதிர்ப்பாளர்களையும் விரைவில் பிடிக்கட்டும். (பாக்கிஸ்தானில் உள்ள) பஞ்சாபின் முதலமைச்சர் மற்றும் அரசாங்கமும் பஞ்சாபில் 100% குற்றம் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டதாகவும், இப்போது எந்தக் குற்றவாளியும் இல்லை என்றும் கூறி வருகின்றனர். ஆனால் கொல்லவும், ஷஹீதும் ஆக்கப்படுகின்றனர். காயப்படுத்தவும் செய்கிறார்கள். அவர்களின் சொத்துக்களுக்கு தீயும் வைக்கப்படுகிறது. அஹ்மதிகள் மீதான தினசரி தாக்குதல்கள் குற்றங்களாகக் கருதப்படுவதில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த அரசாங்கங்களுக்கு அறிவை வழங்குவானாக! மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ் விரைவில் ஜமாஅத்திற்கு ஆதரவான அடையாளங்களைக் காட்டுவானாக! ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)**